பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி-சென்னை-4

12 09 2025 7 15

வெள்ளிக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

- சுற்றுச்சூழலுக்கு உகந்த போக்குவரத்து முறையை உருவாக்குவதில் உலக அளவில் இந்தியா முன்னணியில் உள்ளதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.
- பிரதமரின் சூரிய சக்தி இல்லத் திட்டத்தின் கீழ் நாடு முழுவதும் 20 லட்சம் வீடுகள் பயனடைந்துள்ளதாக புதுப்பிக்கத்தக்க எரிசக்தித் துறை அமைச்சர் திரு. பிரல்ஹாத் ஜோஷி தெரிவித்துள்ளார்.
- கல்வித் துறையில் ஐக்கிய அரபு எமிரேட்ஸுடன் ஒத்துழைப்பை மேலும் அதிகரிக்க இந்தியா உறுதிபூண்டுள்ளதாக மத்திய கல்வி அமைச்சர் திரு. தர்மேந்திர பிரதான் கூறியுள்ளார்.
- இந்தியாவின் நல்லாட்சி நடைமுறைகள் சர்வதேச அளவில் அங்கீகாரம் பெற்றுள்ளதாக மத்திய இணையமைச்சர் திரு. ஜிதேந்திர சிங் தெரிவித்துள்ளார்.
- பிரான்சில் நடைபெற்று வரும் சர்வதேச மகளிர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் ருதுஜா போஸ்லே - பிரிட்டனின் Naiktha Bains இணை அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

சுற்றுச்சூழலுக்கு உகந்த போக்குவரத்து முறையை உருவாக்குவதில் இந்தியா முன்னணி நாடாக திகழ்கிறது என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

புதுதில்லியில் நேற்று நடைபெற்ற இந்திய வாகன உற்பத்தியாளர்கள் சங்க ஆண்டு மாநாட்டில் வாசிக்கப்பட்ட பிரதமரின் உரையில் இது தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொருளாதார வளர்ச்சியில் வாகன உற்பத்தி துறை முக்கியப் பங்காற்றுவதாக பிரதமர் அதில் தெரிவித்துள்ளார்.

மின்சார வாகன உற்பத்தி துறையில் முதலீட்டுக்கான வாய்ப்புகள் இந்தியாவில் அதிகம் உள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

வாகன உற்பத்தியில் இந்தியா தற்சார்பு அடைய வேண்டும் என்று கூறிய பிரதமர், இத்துறை மேம்பாட்டில் தொழில் நிறுவனங்கள் அரசுடன் இணைந்து செயல்பட வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

வளர்ந்து வரும் புதிய தொழில்நுட்பங்களில் புத்தொழில் நிறுவனங்கள் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும் என்றும் திரு. நரேந்திர மோடி வலியுறுத்தினார்.

**<<<<>>>>**

நாட்டில் இதுவரை 20 லட்சம் வீடுகள் பிரதமரின் சூரிய சக்தி இல்லத் திட்டத்தின் கீழ் பயனடைந்துள்ளதாக புதுப்பிக்கத்தக்க எரிசக்தித் துறை அமைச்சர் திரு. பிரல்ஹாத் ஜோஷி தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் நேற்று நடைபெற்ற புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மற்றும் பசுமை ஹைட்ரஜன் தொடர்பான மாநாட்டில் பேசிய அவர், பிரதமரின் சூரிய சக்தி இல்லத் திட்டத்தை செயல்படுத்துவதில் மாநில அரசுகள் மேலும் அதிக கவனம் செலுத்த வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

புதுப்பிக்கத்தக்க எரிசக்தி உற்பத்தியை 2030ஆம் ஆண்டுக்குள் 500 ஜிகாவாட்டாக அதிகரிக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளதாகவும், தற்போது அதில் 50 சதவீதம் எட்டப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இத்துறையில் 8 லட்சம் கோடி ரூபாய் முதலீடுகளை ஈர்க்கவும், 6 லட்சம் புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்கவும் இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளதாகவும் திரு. பிரல்ஹாத் ஜோஷி கூறினார்.

**<<<<>>>>**

கல்வித் துறையில் ஐக்கிய அரபு எமிரேட்ஸுடன் ஒத்துழைப்பை மேலும் அதிகரிக்க இந்தியா உறுதிபூண்டுள்ளதாக மத்திய கல்வி அமைச்சர் திரு. தர்மேந்திர பிரதான் கூறியுள்ளார்.

இந்திய மேலாண்மை கல்வி நிறுவன கிளை திறப்பு விழாவில் பங்கேற்று பேசிய அவர், அகமதாபாத் ஐ.ஐ.எம். வளாகம் துபாயில் தொடங்கப்பட்டுள்ளது இந்திய கல்வியை உலக அளவில் கொண்டு சேர்ப்பதில் ஒரு முக்கிய நடவடிக்கை என்றார்.

சர்வதேச தரத்திலான சிறந்த கல்வியை வழங்க இந்த மையம் செயலாற்றும் என்று அவர் தெரிவித்தார்.

இந்தியாவில் கல்வித் திறனை மேம்படுத்துவதில் தேசிய கல்விக் கொள்கை முக்கிய பங்காற்றுவதாக அவர் குறிப்பிட்டார்.

ஐக்கிய அரபு எமிரேட்சின் கல்வியமைச்சர் டாக்டர் அப்துல் ரகுமானுடனும் அமைச்சர் பேச்சு நடத்தினார்.

துபாயில் செயல்பட்டு வரும் இந்திய பள்ளிகளின் முதல்வர்களுடனும் திரு. தர்மேந்திர பிரதான் ஆலோசனை நடத்தினார்.

<<<<>>>>

இந்தியாவின் நல்லாட்சி நடைமுறைகள் உலகளாவிய அங்கீகாரத்தைப் பெற்றுள்ளதாக மத்திய பணியாளர் நலத்துறை இணையமைச்சர் திரு. ஜிதேந்திர சிங் தெரிவித்துள்ளார்.

மாவட்டங்களின் ஒட்டுமொத்த வளர்ச்சி தொடர்பான 2 நாள் தேசிய மாநாட்டை பட்னாவில் நேற்று தொடங்கி வைத்து அவர் பேசினார்.

பின்தங்கிய மாவட்டங்களின் வளர்ச்சியை உறுதி செய்ய பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையிலான அரசு சிறப்புத் திட்டத்தை செயல்படுத்தி வருவதாக அவர் கூறினார்.

புதுமையான நிர்வாக நடைமுறைகளை பரிமாறிக்கொள்வதுடன் அதிகாரிகள் தொடர்ந்து புதிய விஷயங்களை கற்க வேண்டும் என்று அவர் கேட்டுக்கொண்டார்.

மத்திய அரசின் நடவடிக்கைகள் காரணமாக அரசு திட்டங்களின் பயன்கள் உரிய பயனாளிகளை சென்றடைவதாக அவர் குறிப்பிட்டார்.

மக்களை மையமாகக் கொண்ட நிர்வாகம் என்ற இலக்கோடு மத்திய அரசுடன் மாநிலங்கள் ஒருங்கிணைந்து செயலாற்ற வேண்டும் என்று திரு. ஜிதேந்திர சிங் கூறினார்.

**<<<<>>>>**

சத்தீஸ்கரில் பாதுகாப்புப் படையினர் மேற்கொண்ட நடவடிக்கைகளில் மாவோயிஸ்ட்கள் 10 பேர் கொல்லப்பட்டனர். 26 பேர் கைது செய்யப்பட்டனர்.

அம்மாநிலத்தின் மைன்பூர் வனப் பகுதியில் நடைபெற்ற தேடுதல் வேட்டையின் போது துப்பாக்கிச் சண்டை நடைபெற்றதாகவும் இதில் மாவோயிஸட் அமைப்பின் முக்கிய பிரமுகர் ஒருவர் கொல்லப்பட்டதாவும் பாதுகாப்புப் படையினர் தெரிவித்தனர்.

அவரைப் பற்றி தகவல் அளிப்பவர்களுக்கு ஒரு கோடி ரூபாய் பரிசுத் தொகை அறிவிக்கப்பட்டு இருந்ததாகவும் பாதுகாப்புப் படையினர் கூறினர்.

பிஜப்பூர் மாவட்டத்தில் பாதுகாப்புப் படையினர் மேற்கொண்ட நடவடிக்கைகளில் 26 பேர் கைது செய்யப்பட்டனர்.

அவர்களிடம் இருந்து ஏராளமான ஆயுதங்களும் வெடிப் பொருட்களும் பறிமுதல் செய்யப்பட்டன.

நக்சலைட்டுகளுக்கு எதிரான இந்த நடவடிக்கை நமது பாதுகாப்புப் படையினருக்கு கிடைத்த மிகப்பெரிய வெற்றி என்று உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா கூறியுள்ளார்.

எஞ்சியுள்ளவர்கள் விரைவில் சரணடைய வேண்டும் என்று அவர் அறிவுறுத்தியுள்ளார்.

அடுத்த ஆண்டு மார்ச் மாதத்திற்குள் நக்சல் தீவிரவாதம் முற்றிலும் ஒழிக்கப்படும் என்றும் திரு. அமித் ஷா மீண்டும் தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

வலுவான மருத்துவ ஆராய்ச்சிக் கட்டமைப்பை இந்தியா உருவாக்கி வருவதாக மத்திய சுகாதாரத் துறை இணையமைச்சர் திருமதி அனுப்ரியா படேல் தெரிவித்துள்ளார்.

தில்லியில் தேசிய வைரஸ் ஆராய்ச்சி மற்றும் நோய் கண்டறிதல் ஆய்வகத்தின் மாநாட்டை தொடங்கி வைத்துப் பேசிய அவர், தொற்றுநோய் பாதிப்புகளைக் கண்டறிந்து விரைவான சோதனை நடவடிக்கைகளை இந்தியா வெற்றிகரமாக மேற்கொண்டுள்ளதாக கூறினார்.

கோவிட் பாதிப்பு காலத்திலும், அதன் பின்னரும் இந்த ஆய்வகம் முக்கியப் பங்காற்றியுள்ளதாக அவர் தெரிவித்தார்.

காசநோய், சிக்கில்செல் அனீமியா உள்ளிட்ட நோய்களை ஒழிக்க சிறப்பு இயக்கங்கள் நடைபெற்று வருவதையும் திருமதி அனுப்பிரியா பட்டேல் சுட்டிக்காட்டினார்.

<<<<>>>>

ராஜஸ்தானில் மக்களின் குறைகளைத் தீர்க்க ஒரு மாத கால முகாம்கள் நடத்தப்படவுள்ளதாக அம்மாநில முதலமைச்சர் திரு பஜன்லால் சர்மா கூறியுள்ளார்.

ஜெய்ப்பூரில் நடைபெற்ற ஆய்வுக் கூட்டத்தில் பேசிய அவர்,மாநிலத்தின் அனைத்து நகர்ப்புற பகுதிகளிலும் வரும் 15-ம் தேதி முதல் அடுத்த மாதம் 15-ம் தேதி வரை இந்த முகாம்கள் நடைபெறும் என்றார்.

மக்கள் பிரச்சினைகளுக்கு உடனடி தீர்வுகளை வழங்குவதை நோக்கமாகக் கொண்டு இந்த முகாம்கள் நடத்தப்படும் என்று அவர் தெரிவித்தார்.

பல்வேறு துறைகளின் ஒருங்கிணைப்புடன் இந்த முகாம்கள் நடத்தப்படும் என்று திரு பஜன்லால் சர்மா கூறினார்.

<<<<>>>>

ஒடிசாவில் மகாநதி கரையோர மேம்பாட்டுத் திட்டத்திற்கு முதலமைச்சர் திரு மோகன் சரண் மஜி ஒப்புதல் அளித்துள்ளார்.

இது தொடர்பாக முதலமைச்சர் அலுவலகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், இந்த திட்டம் அடுத்த மூன்று ஆண்டுகளில் செயல்படுத்தப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கென 240 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மகாநதி நதி ஒடிசாவின் உயிர்நாடியாகத் திகழ்கிறது என்றும் இத்திட்டத்தின் கீழ் இந்த நதிக் கரையின் முக்கிய இடங்கள் சுற்றுச்சூழல், கலாச்சார மற்றும் ஆன்மீக சுற்றுலா மையங்களாக உருவாக்கப்படும் என்றும் ஒடிசா முதலமைச்சர் திரு மோகன் சரண் மஜி தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

மகாராஷ்டிராவில் 47 ஆயிரம் வேலைவாய்ப்புகளை உருவாக்கும் வகையில் ஒரு லட்சம் கோடி ரூபாய் மதிப்பிலான முதலீடுகளுக்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் அம்மாநில அரசு நேற்று கையெழுத்திட்டுள்ளது.

தகவல் தொழில்நுட்பம், உணவு பதப்படுத்தும் தொழில்கள், சரக்குப் போக்குவரத்து போன்ற பல்வேறு தொழில்துறைகளில் இந்த ஒப்பந்தங்கள்

கையெழுத்திடப்பட்டுள்ளதாக அம்மாநில முதலமைச்சர் திரு தேவேந்திர பட்னாவிஸ் தெரிவித்துள்ளார்.

முதலீட்டாளர்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்ற மாநில அரசு எப்போதும் தயாராக உள்ளது என அவர் கூறினார்.

பல்வேறு தொழில் துறைகள் தொடர்பான புதிய கொள்கைகளை மாநில அரசு உருவாக்கி வருவதாக அவர் தெரிவித்தார்.

14 துறைகளுக்கான கொள்கைகள் அடுத்த சில நாட்களில் அறிவிக்கப்படும் என்று திரு தேவேந்திர ஃபட்னாவிஸ் தெரிவித்தார்.

<<<<>>>>

தேர்தல் பணிகள் தொடர்பான ஊடக தகவல் தொடர்பு பயிலரங்கு புதுதில்லியில் இன்று நடைபெறுகிறது.

தலைமைத் தேர்தல் ஆணையர் திரு. கியானேஷ்குமார் தலைமையில் நடைபெறும் இந்தப் பயிலரங்கில் 36 மாநிலங்கள் மற்றும் யூனியன்பிரதேசங்களைச் சேர்ந்த அதிகாரிகள் இதில் பங்கேற்கின்றனர்.

பொய்யான மற்றும் ஆதாரபூர்வமற்ற தகவல்களை முறியடிப்பது தொடர்பான ஆலோசனைகள் இந்தப் பயிலரங்கில் மேற்கொள்ளப்படும் என்று தேர்தல் ஆணையம் கூறியுள்ளது.

<<<<>>>>

பிரான்சில் நடைபெற்று வரும் சர்வதேச மகளிர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் ருதுஜா போஸ்லே - பிரிட்டனின் Naiktha Bains இணை அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

இரட்டையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் இந்த இணை 6-4, 6-2 என்ற செட் கணக்கில் பிரான்சின் Alyssa - டென்மார்க்கின் Olivia Gram இணையை வென்றது.

<<<<>>>>

உஸ்பெகிஸ்தானின் சமர்கண்டில் நடைபெற்று வரும் கிராண்ட் ஸ்விஸ் செஸ் சாம்பியன் போட்டியின் 7வது சுற்று முடிவில் இந்தியாவின் நிஹால் செரின் ஆடவர் பிரிவிலும், வைஷாலி மகளிர் பிரிவிலும் முதலிடத்தில் உள்ளனர்.

<<<<>>>>

ஆசிய கோப்பை மகளிர் ஹாக்கிப் போட்டியில் இந்தியா இன்று ஜப்பானை எதிர்கொள்கிறது.

சீனாவின் Gongshu-வில் நடைபெற்று வரும் இப்போட்டியின் நேற்றைய சூப்பர்-4 ஆட்டத்தில் சீனா 4-1 என்ற கோல் கணக்கில் இந்தியாவை வென்றது.

<<<<>>>>

இந்தியா சுவிட்சர்லாந்து இடையேயான டேவிஸ் கோப்பை டென்னிஸ் போட்டி இன்று தொடங்குகிறது.

சுவிட்சர்லாந்தின் Biel-லில் இரண்டு நாட்கள் இப்போட்டி நடைபெற உள்ளது.

<<<<>>>>

ப்ரோ கபடி லீக் போட்டியின் நேற்றைய ஆட்டங்களில் மும்பை - பட்னா அணியையும், தில்லி - குஜராத் அணியையும் வென்றன.

<<<<>>>>